வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –7

| | | | |
|---|---|---|---|
| பெயர் :: திரு.செல்வம் | | தொழில் :: | |
| த/க பெயர் :: | | வயது :: | |
| கிராமம் :: | | | |
| தாலுகா :: | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 21.10.2024.

எதிரி ஆஜர்.

**முதன்மை விசாரணை** (நேரம் : நண்பகல் 12.18 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் வாலாந்தரவை தெற்கு போலையன் நகரில் வசித்து வருகிறேன். ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி கார்மேகத்தை தெரியும். அவர் என்னுடன் வேலைக்கு வருவதால் எனக்கு நன்கு அறிமுகம். சா.ப.சா.8 ராமமூர்த்தி என்பவரை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எதிரி கார்மேகம் என்பவரை கைது செய்தது சம்மந்தமாகவும் எனக்கு எதுவும் தெரியாது. அவரிடமிருந்து பொருள் ஏதும் கைப்பற்றிது சம்மந்தமாகவும் எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 05.04.2022 தேதியிட்ட எதிரி கார்மேகம் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அதே தேதியில் காலை 12.00 – 12.30 மணி வரை வாலாந்தரவை காளியம்மன் கோவில் அருகே எதிரி அரிவாளை எடுத்து ஆஜர் செய்தபோது தயாரித்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்னுடைய கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ 6. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் வெங்கடேஷ் என்பவரை பாஸ்போட் விசாரணைக்காக

கேணிக்கரை காவல் நிலையத்தில் அழைத்தால் நானும், வெங்கடேஷம் காவல் நிலையம் சென்றிருந்தபோது போலீசார் எங்களிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் கடந்த 05.04.2022ம் தேதி காலை 10.30 மணியளவில் கேணிக்கரை காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரி கார்மேகம் என்பவரை என் முன்பாகவும், சாட்சி ராமமூர்த்தி முன்பாகவும் கைது செய்து விசாரித்ததாகவும், அப்போது எதிரி கார்மேகம் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 05.04.2022ம் தேதி காலை 12.00 மணி முதல் 12.30 மணி வரை இராமநாதபுரம் வாலாந்தரவை காமாட்சி அம்மன் கோவில் விலக்கு சாலை பக்கம் உள்ள செடி புதர் அருகே மரக்கைப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்றை எதிரி கார்மேகம் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை கேணிக்கரை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் சாட்சியாக நானும், இராமமூர்த்தியும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரி எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.